

# பனிமயம்

ஜுலை 2025

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அன்பு மக்களே, வணக்கம். நலந்தானா?

நம் தாயின் விழாவை இம்மாதத்தில் தொடங்குகிறோம். அதற்கான ஆயத்தப் பணிகள் எல்லாம் சிறப்பாக நடந்துகொண்டிருக்கின்றன. நம் தாயை மகிமைப்படுத்த யார் யார் என்னென்ன விதங்களில் உழைக்க வேண்டுமோ, ஒத்துழைக்க வேண்டுமோ அவைகளைச் செய்து தாயின் வழியாக இறையாசீரையும் நிறைவாக பெற்றுக் கொள்வோம்.

இம்மாதத்தில் நட்புறவை மையமாக வைத்து நம் கருத்தாளர்கள், எழுத்தாளர்கள் தங்கள் சிந்தனைகளைத் தந்திருக்கிறார்கள். அவைகளை வாசிப்போம், யோசிப்போம், வாழ்வாக்குவோம். வாழ்வு நலமாகும், வளமாகும். உறவு என்று சொல்லும்போது மூன்று உறவுகளுக்கு மனிதன் முக்கியத்துவம் கொடுக்க அழைக்கப்படுகின்றான்.

1. இறை உறவு
2. மனித உறவு
3. இயற்கையோடு உறவு

இறை உறவுதான் எல்லா உறவுகளுக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது. மனிதனையும் இறைவனையும் இணைக்கக்கூடிய விதமாக அமைந்துள்ள ஜெபத்திற்கு நாம் முக்கியத்துவம் கொடுப்போம். காந்தியடிகள் சொல்லுவார் “Prayer is the key to open the day and the lock to close the day”. ஜெபத்தில் இறைவனோடு இணைந்திருப்போம்.

கடவுளை நேசிக்கிறேன் என்று சொல்லிவிட்டு மனிதரை நேசிக்கவில்லையென்றால் கடவுளோடு கொண்டுள்ள உறவு அர்த்தமற்றதாகிவிடுகிறது. 1 யோவான் 4:20 “கண்ணால் காணும் சகோதரனை அன்பு செய்யாதவன் கண்ணால் காணமுடியாத கடவுளை எவ்வாறு அன்பு செய்ய முடியும்”. இறை உறவுக்கு அடிப்படையாக விளங்கும் மனித உறவுக்கு நாம் கொடுக்கும் முக்கியத்துவம் என்ன?

இயற்கையும் இறைவனால் மனிதனுக்கு தரப்பட்டுள்ள கொடையாகும். அந்த இயற்கையை நேசிக்க வேண்டியதும், பேண வேண்டியதும், வரும் தலைமுறையினருக்கு அதைக் கொடுக்க வேண்டியதும் நம் கடமையாகும். மனிதன் தன் சுயநலத்திற்காக இயற்கையை சூரையாடுகின்றான். தன்னைப் பற்றி மட்டுமே அக்கறை கொண்டு அடுத்த தலைமுறையைப் பற்றி எண்ணாமல் செயல்படும் போக்கை தவிர்த்து இயற்கையோடும் நல் உறவை வளர்த்துக் கொள்வோம்.

God Bless You All.

அன்பும், ஆசீரும்

**அருள்பணி. ஸ்டார்வின்**

திருத்தல அதிபர் & பங்குத் தந்தை



உதயம் 26 தாரகை 11

நிர்வாகி & வெளியிடுபவர்
அருள்பணி. ஸ்டார்வின்
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருள்பணி. ஸ்டார்வின்

## பனிமயம் விளம்பர விபரங்கள்

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - ரூ. | 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - ரூ. | 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - ரூ. | 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - ரூ. | 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### தெளிந்து தேர்ந்திடும் பயிற்சிக்காக...

தெளிந்து தேர்வது எப்படி என்பதை மீண்டும் கற்றுக் கொள்ளவும், வாழ்வின் பாதைகளை எப்படித் தேர்ந்தெடுப்பது என்பதை அறியவும், கிறிஸ்துவிடமிருந்தும் நற்செய்தியிலிருந்தும் நம்மைத் திசைமாற்றும் ஒவ்வொன்றையும் நிராகரிக்கவும் நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...

1. மரியன்னையின் திருப்பெயர்கள் . . . . . . . . . . . . . 4
அருள்பணி. குமார்ராஜா

2. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் . . . . . . . . . 6
கலாபன் வாஸ்

3. மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்... . . . . . 8
முனைவர் சி. ஜாக்சன்

4. நண்பர்கள் நிழலில்... . . . . . . . . . . . . . . . . . . . . 10
ரோஸ் சேவியர்

5. நட்பின் நிழலில்...... . . . . . . . . . . . . . . . . . . . . 12
ஜோ. ரெஜினா கிரகோரி

6. பனிமய பல்சுவை நிகழ்ச்சி 2025 . . . . . . . . . . . 14

7. பனிமய சாட்சியம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . 14

8. விவிலியப் போட்டி . . . . . . . . . . . . . . . . . . . . . . 15

9. பனிமயப் பகிர்வு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 18

# மரியன்னையின் திருப்பெயர்கள்

## 27 உடன்படிக்கையின் பேழை!



மரியன்னைக்கு வழங்கப்படும் பெயர்களில் பலருக்கும் அறிமுகமான ஒன்று உடன்படிக்கையின் பேழை அல்லது வாக்குத்தத்தத்தின் பெட்டகம் என்பது. இப்பெயருக்கான காரணம் அறிய பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் சிறிது புரட்டிப் பார்ப்போம். "பழைய ஏற்பாட்டில் புதிய ஏற்பாடு மறைந்திருக்கிறது. புதிய ஏற்பாட்டிலோ பழைய ஏற்பாடு வெளிப்படுத்தப்பட்டுள்ளது" என்று அருமையாகச் சொன்னார் புனித அகுஸ்தினார்.

பழைய ஏற்பாட்டில் நாம் ஓர் உடன்படிக்கைப் பேழையைப் பார்க்கிறோம். இந்தப் பேழையைக் கடவுளே செய்யச் சொன்னார் (விப 25:10-22). "பேழையினுள் நான் உனக்களிக்கும் உடன்படிக்கைக் கற்பலகைகளை வைப்பாய்" (விப 25:21) என்று கட்டளையிட்டார் கடவுள். இப்பேழைக்குள் "மன்னா வைக்கப்பட்டிருந்த பொற்சாடியும், ஆரோனின் தளிர்த்த கோலும், உடன்படிக்கையின் கற்பலகைகளும் இருந்தன" (எபி 9:4) என்று எபிரேயர் திருமடல் விளக்கம் தருகிறது. இதுவே முதல் உடன்படிக்கையின் பேழை.

புதிய ஏற்பாட்டின் திருவெளிப்பாடு நூலில் இன்னொரு உடன்படிக்கைப் பேழை பற்றிய குறிப்பு ஒன்று தரப்பட்டுள்ளது. ஏழாவது எக்காளம் முழங்கியபோது "விண்ணகத்தில் கடவுளின் கோவில் திறக்கப்பட்டது. அந்தக் கோவிலில் உடன்படிக்கைப் பேழை காணப்பட்டது" (திவெ 11:19). முதல் நூற்றாண்டைச் சேர்ந்த எந்தவொரு யூதரும் இதனை வாசித்தால் அதிர்ச்சி அடைந்திருப்பார். காரணம், 600 ஆண்டுகளாக கடவுளின் பெட்டகம் காணாமல் போயிருந்தது. அது எங்கே போனது, எங்கே இருக்கிறது என்னும் செய்தி யாருக்குமே தெரியவில்லை. ஆனால், திடீரென்று யோவான் "உடன்படிக்கைப் பேழை காணப்பட்டது" என்று எழுதினால், குழப்பம் வருவது நியாயம்தானே!

நன்று, யோவான் என்ன சொல்ல வருகிறார்? தொடர்ந்து வாசிக்கும்போது, அடுத்த இறைமொழியிலேயே நமக்கு விடை கிடைக்கிறது. "வானில் பெரியதோர் அடையாளம் தோன்றியது. பெண் ஒருவர் காணப்பட்டார். அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார்" (திவெ 12:1). ஆம், மரியாதான் அந்த உடன்படிக்கையின் பேழை. அவர்தான் விண்ணக, மண்ணக அரசி!

"ஆண்டவர் இயேசு உறையும் இல்லிடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அன்னை மரியாதான் புதிய உடன்படிக்கையின் பேழை. அவரே கடவுளின் மாட்சி தங்குமிடம். அவரே கடவுள் மனிதரின் நடுவே தங்குமிடம்" என்று கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி (எண்: 2676) அருமையாகச் சொல்கிறது. ★



# 28 விண்ணகத்தின் வாயில்!



லொரெட்டோ மன்றாட்டு மாலையில் மரியன்னைக்கு வழங்கப்படும் ஒரு வித்தியாசமான திருப்பெயர் விண்ணகத்தின் வாயில். இறையியல் பார்வையில் அணுகுவோருக்கு சற்று வியப்பைத் தருகிறது இப்பெயர். காரணம் இயேசுதானே விண்ணகத்தின் வாயில்? அவர்தானே "நானே **வாயில்.** என் வழியாக நுழைவோருக்கு ஆபத்து இல்லை. அவர்கள் உள்ளே போவர்; வெளியே வருவர்; மேய்ச்சல் நிலத்தைக் கண்டுகொள்வர்" (யோவா 10:9) என்று கூறினார். எனவே, மரியாவை எப்படி விண்ணகத்தின் வாயில் என்று அழைக்கலாம் என்ற கேள்வி எழுவது இயல்பே.

ஆனால், பழைய ஏற்பாட்டின் பெத்தேல் இந்தப் பெயரைப் பெற்றிருந்தது என்பதை அறியும்போது நமது கேள்வியின் வீரியம் குறைந்து விடுகிறது. யாக்கோபு பெயர்செபாவிலிருந்து காரானை நோக்கிப் பயணம் செய்தபோது ஓரிடத்தில் இரவைக் கழித்தார். அன்றிரவு ஆண்டவர் அவருக்குக் கனவில் தோன்றி, "நான் உன்னோடு இருப்பேன். இந்த நிலத்தை உனக்கும், உன் வழிமரபினருக்கும் உரிமையாக்குவேன்" என்று வாக்களித்தார். விழித்தெழுந்த யாக்கோபு, 'இந்த இடம் எவ்வளவு அச்சத்திற்குரியது! இதுவே இறைவனின் இல்லம், **விண்ணுலகின் வாயில்**' (தொநூ 28:17) என்றார். மேலும், அந்த இடத்திற்கு பெத்தேல்" ("கடவுளின் இல்லம்") என்று பெயரிட்டார். எனவே, பெத்தேல் என்னும் இடம் "விண்ணுலகின் வாயில்" என்று பெயர் பெற்றால், இயேசுவைத் தம் திருவயிற்றில் தாங்கிய அன்னை மரியாவை அப்பெயரால் அழைப்பதில் தவறில்லை.

மேலும், அன்னை மரியா இயேசுவை அடைவதற்கான சிறந்ததொரு வழி என்பதையும் பல புனிதர்களும், திருமறைத் தந்தையரும் அறிக்கையிட்டுள்ளனர். "ஆண்டவரது வாயில் இதுவே! இது வழியாய் நீதிமான்களே நுழைவர்" (திபா 118:20) என்று முன்னறிவிக்கப்பட்ட இறைமொழி மரியன்னைக்கும் பொருந்தும்.

"மரியா வழியாகத்தான் இயேசு விண்ணகத்திலிருந்து மண்ணகத்திற்குள் நுழைந்தார். எனவே, அவர் விண்ணகத்தின் வாயில்" என்கிறார் புனித ஜான் ஹென்றி நியூமன். "பழைய ஏவாள் கடவுளின் கட்டளையை மீறியபோது, விண்ணகத்தின் வாயில் அடைக்கப்பட்டது. மரியா உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று கீழ்ப்படிந்தபோது, விண்ணகத்தின் வாயில் திறக்கப்பட்டது" என்றும் சொல்லி நம்மை வியக்க வைக்கிறார் புனித நியூமன்.



அருள்பணி. குமார்ராஜா

# இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்



தாய்த் திருஅவை, தேங்கிக் கிடக்கும் குட்டையோ, குளமோ, அல்ல; மாறாக, உயிரோட்டமான நதி. காலங்கள் தோறும், தூய ஆவியாரின் வழிநடத்துதலுக்கேற்ப, மாற்றங்களை மனமகிழ்வோடு ஏற்றுக் கொள்கிறது. புதியனவற்றில், நல்லனவற்றை வரவேற்கிறது.

பல நூற்றாண்டுகளாக வாழ்ந்த வாழ்க்கையில், சில பல மாற்றங்களைக் கொண்டு வர வேண்டுமென்ற முடிவோடுதான், இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தைத் தொடங்கினார் திருத்தந்தை புனித 23ஆம் ஜான். “ஏன் இந்தச் சங்கம்?” என்ற கேள்விக்குப் பதிலாய் அமைந்த திருத்தந்தை புனித 23ஆம் ஜான் அவர்களது எண்ணங்கள் பின்னாளில் சங்கத்தால் வெளியிடப்பட்ட “இன்றைய உலகில் திருஅவை” என்னும் ஏட்டில் உள்ளன. அவை பின்வருமாறு :

❖ “இன்று திருச்சபை பெரும் மாற்றங்களை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. குழப்ப நிலையிலுள்ள ஒரு சமுதாயத்தைக் காண்கிறது. சமுதாயம் ஒரு புதிய அமைப்புப் பெற விரைந்து கொண்டிருக்கும் இந்நேரத்தில் திருச்சபை மிகப் பெரிய பொறுப்புகளைத் தன்மேல் சுமக்க நேரிட்டுள்ளது. பெருங் கவலைகளால் அலைக்கழிக்கப்பட்ட வரலாற்றுக் காலங்களிலெல்லாம் திருச்சபை இவ்வாறு கனமான பொறுப்புகளை ஏற்று வந்துள்ளது.

நற்செய்தியின் ஆற்றல் என்றும் நிலைத்திருப்பது, உயிருள்ளது, தெய்வீகமானது. இவ்வாற்றலை இன்றைய உலகுக்கு ஊட்டுவதுதான் திருச்சபையின் கடமையாகும். இன்றைய உலகம் அறிவியல் துறையிலும், தொழில்நுட்பத் துறையிலும் தான் அடைந்துள்ள வெற்றிகளிலேயே பெருமைப் பட்டு வருகிறது. ஆனால், அதே நேரத்தில் சமூக வாழ்வைப் பாதிக்கும் பல தாக்கங்களுக்கும் ஆளாகியுள்ளது. சிலர், கடவுளுக்குப் புறம்பாக இச்சமூக வாழ்வை மாற்றியமைக்க வழி தேடுகிறார்கள்.

ஆக, இன்றைய மக்கள் இவ்வுலகப் பொருள்களைப் பொறுத்தமட்டில் முன்னேறியுள்ளதற்கேற்ப அருள்நெறி நலன்களைப் பொறுத்தமட்டில் முன்னேறவில்லை எனக் காண்கிறோம்.

❖ இன்றுவரை திருச்சபை காலத்தின் போக்குகளை உணர்ந்து வந்துள்ளது. ஒவ்வொரு யுகத்திலும் புதிய உருப்பெற்றுத் திகழ்கிறது. புதிய ஒளி சிந்துகிறது. புதிய வெற்றிகளைப் பெற்று வருகிறது. எனினும், அதே நேரத்தில் ஒரே திருச்சபையாக அது என்றும் நிலைத்திருக்கிறது.

காணக்கூடிய விதத்தில் கிறிஸ்தவர் அனைவரிடையேயும் ஒன்றிப்பு உருவாக வேண்டுமென உலகில் பற்பல பகுதிகளிலும் பலர் அதிகமதிகம் தாராள உள்ளத்தோடு முயன்று வருவதை நாம் பார்க்கிறோம். இந்த ஒன்றிப்பே இறை மீட்பரின் விருப்பத்தை நிறைவேற்றுவதாய் அமையும்.

இவ்வுலகைச் சார்ந்த நலன்களைத் திருச்சபை தன் நேரடிக் குறிக்கோளாகக் கொண்டிராவிட்டாலும், தன்னுடைய பயணத்தின் போது உலகப் பிரச்சனைகளையும் சிக்கல்களையும் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது. ஒவ்வொரு மனிதரும் நிறைவாழ்வு பெற்றிட வேண்டும். ஆயினும், மனிதருடைய வாழ்வு இன்னும் அதிக மனிதப் பண்புடையதாக மாறுவதற்கு உதவுகின்ற வழிவகைகள் அழியா ஆன்மாக்களுக்கு எத்துணைப் பயன் அளிக்கும் என்பதை உண்மையாகவே திருச்சபை அறிந்திருக்கிறது.

தாங்கள் யார், தங்கள் மாண்பு எத்தகையது, தாங்கள் எந்த ஒரு கதியை நோக்கிச் செல்ல வேண்டும் என்று மனிதர்கள் அறிந்திடத் திருச்சபை துணை செய்கிறது. எனவேதான், திருச்சபை இன்று சட்டப் பூர்வமாகவோ நடைமுறையிலோ அனைத்து நாட்டு நிறுவனங்களில் உளவோட்டத்தோடு பங்கு கொள்கிறது. குடும்பம், பள்ளி, உழைப்பு, குடிமைச் சமூகம், இவற்றோடு இணைந்த சிக்கல்கள் ஆகியவற்றைப் பற்றிய சமூகப் படிப்பினையை அது உருவாக்கியுள்ளது. இப்படிப்பினை வழியாகத் திருச்சபை ஆசிரியம் தனிப்பெரும் மதிப்பைப் பெறுகிறது.

❖ இக்கொள்கை விளக்கம் இன்றும் வருங்காலத்திலும் செயலாக வேண்டுமென்றும் நான் விரும்புகிறேன். இதிலே தீர்மானிக்கப்பட்டவைகள் யாருக்காகக் கூறப்பட்டிருக்கின்றனவோ அவர்கள் அவற்றைத் தூய்மையாகக் கடைப்பிடிக்க வேண்டும். அவை முழுமையாகச் செயலாக்கப்பட வேண்டும். இக்கொள்கை விளக்கம் செயலாக்கம் பெறுவதை இதற்கு மாறான எந்தச் சட்டமும் தடுக்க முடியாது.

மேற்கண்ட சங்க ஏட்டிலுள்ள இச்சொற்றொடர்களே இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் நோக்கத்தைத் தெளிவு படுத்துவதாய் அமைந்துள்ளன.

தொகுத்தளிப்பவர் : **கலாபன் வாஸ்**



# மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்...



ஜூலை 26 அதிகாலை வேளை மணி மூன்று... நம்மில் பலருக்கு அது நள்ளிரவு. ஊரில் உள்ள எல்லா சாலைகளும் அடங்கிக் கிடக்கும் வேளையில் அந்த ஒரு சாலையில் மட்டும் சாரை சாரையாக மக்கள் நடந்த வண்ணம் உள்ளனர். யாரோ ஒருவரைப் பார்த்து விட வேண்டும் என்ற ஆவல் அந்த மக்களுடைய கண்களின் ஏக்கத்தில் தெரிகிறது. அந்தச் சாலை தூத்துக்குடி கடற்கரைச் சாலை. அவர்கள் தங்களுடைய அன்னையின் திருவிழாவை கொண்டாட்டத்துடன் தொடங்க மகிழ்ச்சியோடு செல்கிறார்கள்.

ஆம்.... அவர் அவர்களுக்கு மட்டும் அன்னை அல்ல. இந்த தூத்துக்குடி மாநகரின் சமத்துவ அன்னை. கிறித்தவரோடு இணைந்து உலகின் எல்லா மக்களுக்கும் இறைவனால் தரப்பட்ட ஒரே அன்னை. பார் போற்றும் நம் பனிமய அன்னை. நிறைய நேரம் மரியன்னையின் மீதான மக்களின் பக்தி மெய் சிலிர்க்க வைப்பதாக உள்ளதை பலரும் சொல்ல கேட்டிருக்கிறோம். உணர்ந்திருக்கிறோம். ஆனால் அதனை ஆழ தெரிந்து வைத்திருக்கிறோமா? இவ்வளவு மக்களை தன்னை நோக்கி ஈர்க்க நமது அன்னை மரியா அப்படி என்னதான் செய்தார்?

"அவர் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" என கானாவூர் திருமணத்தில் நமது அன்னை மரியா சொன்னது வெறும் வார்த்தையல்ல. அவர் வாழ்க்கை. மங்கள வார்த்தை முதல் கல்வாரி கடந்து பெந்தெகொஸ்தே நாள் வரை அவர் இறைவன் அவருக்குச் சொன்னதையெல்லாம் செய்த உன்னத அன்னையல்லவா! அதனோடு இணைந்து "கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும்" (யோவான் 12: 24) எனும் ஆண்டவர் இயேசுவின் வாக்கின்படி இறைவனுக்காக இழத்தல் எனும் வார்த்தைக்கு உயரிய முன்மாதிரி நமது அன்னை. இந்த கீழ்படிதலும், இழத்தலும் இருப்பதால்தான் அவர் என்றும் மகிமை

குன்றாத அன்னையாக இருந்து நம்மை இறைவனை நோக்கித் திருப்பும் வழிகாட்டியாக இருக்கிறார் .

விவிலியப் பார்வையை தொடர்ந்து நம் பரிசுத்த பனிமய அன்னை பேராலய வரலாற்றை இரத்தினச் சுருக்கமாக சொல்வதென்றால்,

உரோமையில் ஜான் என்னும் செல்வச் சீமானுக்கும் அப்போதிருந்த திருத்தந்தை லிபேரியுஸ் அவர்களுக்கும் அன்னை மரியா கனவில் தோன்றி, எஸ்கலின் மலையில் தனக்கென்று ஒரு ஆலயம் கட்டும்படி கூறினார். பனி பெய்திருக்கும் மலை முகட்டை அவர்களுக்கு அடையாளமாகத் தருவதாக உறுதியளித்தார். உரோமையில் அந்த மாதம் பனி பொழிவதில்லை. ஆனால் அந்த இரவு முழுவதும் உறைபனி பெய்து போர்வை போல் மலையை மூடியது. காலையில் செய்தி அறிந்து பனி பெய்த இடத்தைக் காண பெருங்கூட்டம் கூடியது. பனி பெய்த இடத்தின் வடிவத்திலேயே ஆலயம் எழுப்பப்பட்டது. இதுவே மாதாவுக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட முதல் பேராலயம்.

திருத்தூதரான புனித லூக்கா தீட்டியதாகக் கூறப்படும் மாதாவின் ஓவியம் ஒன்று இங்கு உள்ளது. அதன் பெயர் மரியா மேஜோரே (இலத்தீன் மொழியில்). "Signora Das Nevis" என்றால் 'பனிமய அன்னை' என்று பொருள். அந்த ஆலயம் பனிமய அன்னைக்கென அர்ப்பணிக்கப்பட்ட நாள் ஆகஸ்ட் 5.

அதேபோல 1542களில் புனித பிரான்சிஸ் சவேரியார் முத்துக்குளித்துறைப் பகுதிகளில் வருகை தந்து கிறித்தவ நெறிக்கு மக்களை மனம் மாறச் செய்து பின்னர் பிலிப்பைன்ஸ் நகரம் செல்லும் போது அங்கிருந்த அகுஸ்தீனிய கன்னியர்களிடம் முத்துநகர் மக்களுக்காக வேண்டி, அவரது மறைவுக்குப் பின் 1555 ஆம் ஆண்டு ஜூன் 9ஆம் நாள் நமது பனிமய அன்னையின் திருச்சுரூபம் நமது நகருக்கு வந்தது.

கி.பி. 1582ஆம் ஆண்டு இயேசு சபை குருக்கள் கூடி சிறிய ஆலயம் கட்டி அன்னையின் திருச்சுரூபத்தை அதில் வைத்தனர். பல ஆண்டுகள் கழித்து இப்போதிருக்கும் ஆலயம் 1713ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு ஆகஸ்ட் 5 ஆம் நாள் அன்னை மரியாவுக்கு அர்ப்பணிக்கப்பட்டதால் நமது அன்னை பரிசுத்த பனிமய அன்னை என அனைவராலும் அன்போடு போற்றப் பெறுகிறார் என்பது வரலாறு.

"தம்மால் முன்பே தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் தம் மகனின் சாயலுக்கேற்றவாறு இருக்க வேண்டுமெனக் கடவுள் முன் குறித்து வைத்தார். தாம் முன் குறித்து வைத்தோரை அவர் அழைத்திருக்கிறார். தாம் அழைத்தோரைத் தமக்கு ஏற்புடையோராக்கி இருக்கிறார். தமக்கு ஏற்புடையோரானோரைத் தம் மாட்சியில் பங்குபெறச் செய்தார்" (உரோ 8:29-30) எனும் இறைவாக்கு அன்னை மரியாவின் வாழ்வில் நிறைவேறியதைப் போல இந்தத் திருவிழா "அவர் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" எனும் நம் பனிமய அன்னையின் வாக்குப்படி இறைவனுக்கான நமது கீழ்ப்படிதலை உறுதி செய்யட்டும். மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம். அவர் சொன்னதையும் கடைப்பிடிக்க மறுக்க வேண்டாம். நமது வாழ்வும் பரிசுத்த பனிமய அன்னையின் பரிந்துரையால் மகிழ்வில் பகிர்வில் ஒளிரட்டும். அனைவர்க்கும் பார் போற்றும் பனிமய அன்னையின் பெருவிழா நல்வாழ்த்துகள்!



முனைவர் சி. ஜாக்சன்



ஜூலை 30 : உலக நண்பர்கள் தினம்

# நண்பர்கள் நிழலில்

உலகில் நமக்கு நம்பிக்கையும், ஆறுதலும் தருவதில் முதன்மையானவர்கள் நண்பர்கள். நண்பர்களிடையே உள்ள உறவு நட்பு எனப்படுகிறது. நட்பு தோழமை, சிநேகம் எனப் பொருள்படும். வாழ்வின் இறுதி வரை எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி, பயணிக்கக்கூடிய மனம் படைத்தவர்கள், வாழ்வில் நாம் துணிந்து நிற்கும்போதும், துன்பத்தில் துவண்டபோதும் உறுதுணயாக நிற்பவர்கள் நண்பர்கள். சுயநலமின்றி, சாதி, மத பேதமின்றி, உள்ளொன்றும் புறமொன்றும் பேசாது, அன்பும் அக்கறையும் என்றும் மாறாது உயிர் உள்ளளவும் உதவுபவர்கள் உண்மை நண்பர்கள்.

யாரிடமும் சொல்லத் தயங்கும் விடயங்களைக்கூட நண்பர்களோடு பகிர்ந்து கொள்வோம். யாரோடு சேர்கிறோமோ அவர்களாகவே மாறி விடுவோம். உண்மையான நண்பன் நமது சுயத்தை மாற்றி விடுவதில்லை. நமது திறமைகளையும், நல்ல குணங்களையும் நமக்கே அறிமுகம் செய்பவன். எல்லாரிடமும் பேசுவோம், ஆனால் ஒரு சிலரே உயிர் நண்பர்களாக மாறுவார்கள். நமது குணங்களோடு யார் ஒத்துப் போகிறார்களோ அவர்களையே நாம் நண்பர்களாக தேர்ந்தெடுப்போம்

“உன் நண்பர்கள் யாரென்று கூறு: நீ யாரெனக் கூறுகிறேன்” - மேலை நாட்டுப் பழமொழி.

“நம்பிக்கையான நண்பர்களைப் பெறுவது மிகப்பெரிய சொத்தாக கருத வேண்டும். உண்மையான நட்பை விட இந்த பூமியில் மதிப்பிற்குரியது எதுவுமில்லை” - புனித தாமஸ் அக்குவினாஸ்.

உண்மையான நண்பன் எத்தகையவர் என்பதை அறிய ஓர் ஆசிரியரின் விளக்கம். மூன்று கண்ணாடிக் குவளைகள் எடுத்து, முதல் குவளையில் பஞ்சைப் போட்டு, தண்ணீர் ஊற்றவும். இரண்டாவது குவளையில் சிறிது செம்மண் போட்டு நீர் ஊற்றவும். மூன்றாவது குவளையில் சிறிது சர்க்கரை (சீனி) போட்டு நீரை ஊற்றவும் முதல் குவளையில் பஞ்சு நீரை முழுவதும் உறிஞ்சி விடும். சில நண்பர்கள் நமக்குள் உள்ள அனைத்தையும் உறிஞ்சி நம்மை ஒன்றுமில்லாமல் செய்து விடுவர். இரண்டாவது செம்மண் குவளையில் செம்மண் நீரில் கரைந்து நீரின் நிறமே மாறி விடும். சில நண்பர்கள் நம்மோடு கலந்து நமது குணத்தையே மாற்றி விடுவர். மூன்றாவது குவளையில் சீனி கரைந்து நீரை

சுவைமிக்கதாக மாற்றிவிடும்.. அத்தகைய நண்பர்கள் நம்மோடு ஒன்றாக நமது குணங்களை மாற்றாமல், நம் வாழ்வை சுவை மிகுந்ததாக மாற்றி, எந்த சூழலிலும் நம்மை விட்டுக் கொடுக்காத உயிருக்குரிய இனிய நண்பர்களாகத் திகழ்வர்.

"நண்பர்களுக்காக எதையும் இழக்கலாம். எதற்காகவும் நண்பர்களை இழந்து விடாதீர்கள்." மனிதர்களை நேசிக்கும் பழக்கத்தை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வோம்.

**"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்**
**நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்"**

– நற்றிணை (355).

நண்பர்கள் கொடுப்பது நஞ்சாக இருப்பினும் எந்த சந்தேகமின்றிப் பருகுவது நல்ல நட்பின் இலக்கணம். நண்பர்களுக்கிடையில் சந்தேகம் கூடாது. சிறந்த நண்பர்களாக அக்பர்-பீர்பால், கர்ணன்-துரியோதனன் என்று பலரை கூறினாலும் விவிலியத்தில் தாவீது-யோனத்தான் நட்பு மிகவும் சிறப்பு வாய்ந்தது. அவர்களின் நட்பு உள்ளம், உயிரோடு ஒன்றுபட்டு அன்பால் இணைந்திருந்தது.. தாவீது யோனத்தானின் தந்தை சவுல் அனுப்பிய இடமெல்லாம் வெற்றியைக் கொணர்ந்தாலும், மக்களின் பெருமையான வாழ்த்துகளைக் கேட்ட சவுல் பொறாமையால் தாவீதைக் கொல்லத் தேடுகிறார். தாவீது தப்புவதற்கு யோனத்தான் உதவி செய்கிறார். (1சாமு.18-20அதி.) இறுதியில் தாவீது தன் நண்பன் யோனத்தானின் மகன் மெபிபோசேத்துவை (கால் ஊனமுற்றவன்) தன்னோடு உணவருந்த செய்து, சவுலின் சொத்துக்கு உரிமையாக்குகிறார். (2சாமு. 14-30)

"இயேசுவும் இலாசரும் சிறந்த நண்பர்கள். பெத்தானியாவில் நண்பர் இலாசர் இறந்துவிட்ட செய்தியைக் கேட்டு கண்ணீர் விட்டு அழுதார்" (யோவா 11:35) இந்நட்பு இதயம் கலந்தது.

இறைமகன் இயேசு : "தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" (யோவா. 13:13)

இயேசு தன் சீடர்களை நண்பர்கள் என்று அழைத்தார். அதன் வழியாக நம் அனைவரையும் நண்பர்கள் ஆக்கிக் கொண்டார்.

**"அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்**
**அல்லல் உழப்பதாம் நட்பு** " – திருக்குறள் (788)

அழிவைத் தரும் தீய வழிகளை விலக்கி, நல்ல வழியிலே நடத்தி, அழிவுக் காலத்தில் நண்பன் துன்புறும் போது தானும் துன்புறுவதே சிறந்த நட்பாகும்.

இயேசு நம்மை நல்வழியில் நடத்தி, நமக்காக சிலுவையில் உயிர் துறந்தவர். அவரின் சிறந்த நண்பராக வாழ முற்படுவோம்! சிலுவையில் உயிர் பிரியும் தருணத்திலும் தாய் மரியை தன் அன்பு சீடரிடம் ஒப்படைத்து விட்டு, அமைதியுடன் விண்ணகம் சென்றார்.

நமது குறைகளை ஏற்றுக் கொள்ளாத மனநிலையைப் பெற்றுள்ள நாம், நமது குறைகளைச் சுட்டிக் காட்டும் நண்பர்களை வெறுக்கிறோம். அவர்களே நம்மை உயர்த்திச் செல்ல பயன்படும் ஏணிகள்.

நண்பர்களிடம் வைத்திருக்கும் நம்பிக்கையைக் காப்பாற்றுவது நமது கடமையும் பொறுப்பும் ஆகும். விலகிச் சென்ற நண்பர்கள் வருகைக்காகக் காத்திருப்போம்!.



ரோஸ் சேவியர்

# நட்பின் நிழலில்...



“ரோசி அக்கா! ரோசி அக்கா! கொஞ்சம் காஃபி பவுடர் இருக்குமா? மக சாந்தி தேர்வுக்குக் கிளம்பிக் கொண்டிருக்கா. காஃபி போட்டுக் கொடுக்கனும். கடைக்குப் போக நேரமில்லை...” கேட்டுக்கொண்டே ரோசியின் வீட்டுக்குள் நுழைந்தாள் ஜீவா.

‘ஹும்... இது மாமூல்தானே’ மனதில் திட்டிக் கொண்டு, “உனக்கில்லாததா, இந்தா காஃபி டப்பா. தேவையான அளவு எடுத்துக்க” தாராளமாக நீட்டினாள் ரோசி.

“அக்கா, அப்புறம் உங்களுக்கு விஷயம் தெரியுமா? நம்ம காலனிக்குப் புதுசா குடியேறியிருக்கிற எதிர் வீட்டு விஜயாகிட்ட கொஞ்சம் கவனமா இருந்துக்குங்க. கடன், கிடன் கேட்டு தொந்தரவு பண்ணப்போறா. சரி எனக்கு நேரமாயிட்டு... வர்றேன். ஐயயோ, வீட்ல சீனி இருக்குதான்னு தெரியலையே. கடைக்குத்தான் போகனும்...” நெளிந்தாள் ஜீவா.

“சீனிதானே.... அக்கா தரமாட்டேனா. இந்தா, பால் பாக்கெட்டையும் சேர்த்து எடுத்துட்டுப் போ. அந்த விஜயாவைப் பத்தி வேற என்ன உனக்குத் தெரியும்? சொல்லிட்டுப் போ. இல்லன்னா தலை வெடிச்சிடும்” ஆவலோடு கேட்டாள் ரோசி.

“அவ மாப்பிள்ளைக்கு உடம்பு சரியில்லைன்னு, வேலைல இருந்து தூக்கிட்டாங்களாம். வாடகை அதிகம்னு பழைய வீட்டைக் காலி பண்ணிட்டு இங்கே வந்திருக்காங்க. அதிகமா பழகினா, நாமதான் கஷ்டப்படனும். பார்த்துக் கவனமா நடந்துக்கிருங்க...” முன்னெச்சரிக்கை செய்து விட்டுச் சென்றாள் ஜீவா.

ஜீவாவின் கணவன் ராஜா வேலைக்குப் போனாலும், பாதி சம்பளத்தைக் குடித்துக் காலி பண்ணிவிடுவான். ஜீவா, காலனியில் உள்ளவர்களிடம் நட்புடன் பழகித் தன் பேச்சுத் திறமையால் அங்குமிங்கும் கடன் வாங்கி ஒரே மகள் ஜெஸியை 12ஆவது வரைப் படிக்க வைத்துவிட்டாள். தன்னைப் போலத்தான் விஜயாவும் இருப்பாள் என்ற எண்ணம் அவளுக்குள் இருந்தது. அவள் தனக்குப் போட்டியாக வந்து விடுவாளோ என்ற பயமும் இருந்தது. காலனியிலுள்ள மற்றவர்களிடமும் விஜயாவைப் பற்றி சொல்லி வைத்தாள்.



“அம்மா! அம்மா!” என்று அழைத்துக் கொண்டே ரோசியின் வீட்டுக்கு வந்தாள் விஜயா.

‘ஜீவா சொன்னது சரியாகத்தான் இருக்குது. நாம் கவனமா இருக்கனும்’ என்று மனதிற்குள் சுதாரித்துக் கொண்டே, வீட்டிற்குள் இருந்து வெளியே வந்த ரோசி, “என்ன விஜயா? பட்டும் படாமலும் கேட்டாள்.

“அம்மா! அவருக்கு உடம்புக்கு முடியல. அதனால வேலைக்குப் போக முடியல. அதுதான் நான் வேலைக்குப் போவதற்காக நான்கைந்து கம்பெனிகளில் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறேன்” என்றவளைத் தொடர விடாமல், “ஐயையோ! மாசக் கடைசியில வந்திருக்க. உனக்கு உதவ முடியலையே” என்றாள் ரோசி.

“நான் உதவி கேட்டு வரலம்மா. நான் வெளியே போறதால, எங்க வீட்டுச் சாவியைக் கொடுத்துட்டுப் போக வந்தேன். அவர் மருத்துவமனைக்குப் போயிருக்கிறார். வந்ததும் கொடுத்திருங்கம்மா” என்று ரோசியின் கைகளில் சாவியைத்

திணித்துவிட்டுச் சென்றாள் விஜயா. ரோசியின் முகத்தில் ஈயாடவில்லை.

திடீரென்று ஒருநாள் தட்டில் தேங்காய், பழம், அழைப்பிதழோடு ரோசியின் வீட்டு வாசலில் நின்றாள் விஜயா. ஜீவாவும் அப்போது ரோசியின் வீட்டில் இருந்தாள்.

“அம்மா! நம்ம காலனிக்குப் பக்கத்திலேயே நாளைக்கு மளிகைக்கடை வைக்கப் போறோம். நீங்க வந்து ஆசீர்வாதம் பண்ணனும். ஜீவாம்மா! நீங்களும் வாங்க. இனி மாசக் கடைசின்னு கவலைப்பட வேண்டாம். கடைக்காக ரொம்ப தூரம் போக வேண்டாம். நம்ம கடையிலேயே வாங்கிக்கலாம். பணத்தைப் பற்றியும் யோசிக்க வேண்டாம்” சிரித்துக் கொண்டே சொல்லிச் சென்றாள் விஜயா.

ரோசியும் ஜீவாவும் அசடு வழிந்தனர். ரோசி, விஜயாவை அழைத்து, “நீ வேலைக்கு விண்ணப்பித்தாயே... என்ன ஆச்சு?” என்று கேட்டாள்.

“என் கணவரைக் கவனிக்கனும். அதுமட்டுமல்லாமல், அவர் வேலை பார்த்த இடத்திலிருந்து அவருக்கு வரவேண்டிய பணம் வந்தது. அதனால வேலைக்குப் போகாம, கடை வைக்க முடிவு பண்ணிவிட்டேன்...” விளக்கினாள் விஜயா.

கடை மெல்ல மெல்ல களைகட்டியது. காலனியில் உள்ளவர்களின் நட்பு கொஞ்சம் கொஞ்சம் விஜயாவுக்குக் கிடைக்க ஆரம்பித்தது.

“அம்மா! நான் விண்ணப்பித்திருந்த கல்லூரியில் எனக்கு இடம் கிடைத்துவிட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட தகவலை அலைபேசியில் அனுப்பியிருக்கிறார்கள். நாளைக்குள் ஒரு லட்சம் ரூபாய் செலுத்தி சேர வேண்டும். இல்லைன்னா, என்னோட இடத்தை வேறு யாருக்காவது கொடுத்து விடுவாங்க” பதட்டத்துடன் கூறினாள் ஜீவாவின் மகள் ஜெஸி.

“ஒரு லட்சமா! எங்கேடி போவேன்?” வாயைப் பிளந்தாள் ஜீவா.

காலனியில் உள்ளவர்களிடம் கேட்டுப் பார்த்தாள். “அஞ்சோ, பத்தோ அப்பப்ப வாங்கிட்டுப் போவ. சரி, ஆயிரம், இரண்டாயிரம்கூட படிப்புக்காகக் கடன் கோடுக்கலாம். ஒரு லட்சம் கொடுக்கிற அளவுக்கு யாரும் இந்தக் காலனியில் வசதியா இல்லையேம்மா” எல்லாரும் கைவிரித்தார்கள்.

ரோசியும் தான் மாசச் சம்பளம் வாங்குறவர்கள்தானே என இயலாமையை எடுத்து வைத்தாள்.

இனி படிக்க வைக்க முடியாது. வேலைக்குத்தான் மகளை அனுப்ப வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள் ஜீவா. மகளோ, தன்னைப் படிக்க வைத்தால் படித்து முடித்து வேலை பார்த்து, நிறைய சம்பாதிக்க முடியுமே என வாதிட்டாள்.

இதையெல்லாம் கேள்விப்பட்ட விஜயா, ஜீவாவிடம் வந்து கொஞ்சமும் தயங்காமல், தன் கரங்களிலிருந்த வளையல்களைக் கழற்றி, “ஜீவாக்கா, ஜெஸியை உடனே கல்லூரியில சேருங்கக்கா” என்று கைகளில் திணித்ததும், ஜீவா அப்படியே அதிர்ந்து விட்டாள்.

“அம்மா விஜயா, நீயே, பணம் இல்லாமல் கஷ்டப்படற...” என்றவளிடம், அக்கா, பணம், காசு வரும், போகும்... ஆனா உங்க எல்லோரின் நட்புதான் எனக்கு வேணுங்கா. இந்த நகையை அடகு வச்சு, முதல்ல அவளை சேர்த்துவிட்டு வாங்க. கடனை அடைக்கிறதப் பத்தி பிறகு யோசிக்கலாம் பெருந்தன்மையாகக் கூறினாள் விஜயா.

அவளது நட்பின் நிழலில் ஜீவாவின் ‘வாய்ப்பேச்சு’ என்னும் நிஜம் தோற்றுப் போய் வெறுமையாக நின்றது.



**ஜோ. ரெஜினா கிரகோரி**

# பனிமய பல்சுவை நிகழ்ச்சி 2025



நம் பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயப் பெருவிழா நாள்களின் போது ஒவ்வொரு நாளும் மாலை 04.30 மணி முதல் 05.30 மணி வரை சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும், ஸ்நோஸ் பசிலிக்கா யூடியூப் சேனலிலும் பின்வரும் சிறப்பு நிகழ்வுகள் ஒளிபரப்பப்பட உள்ளன.

**1. கடல் கடந்து சென்றாலும் (சாட்சியப் பகிர்வு)**
பரிசுத்த பனிமயத் தாயின் பரிந்துரையால் தாங்கள் பெற்றுக்கொண்ட நன்மைகளைக் குறித்து அன்னையின் பிள்ளைகள் பகிரும் சாட்சியங்கள் வீடியோ காணொளியாக ஒளிபரப்பப்படும்.

**2. மரியன்னைப் போட்டிகள்**
தூத்துக்குடி நகரப் பள்ளிகளின் குழந்தைகள் பங்கேற்ற மரியன்னை மாறுவேடப் போட்டி, ஓவியப் போட்டி, மரியன்னை பேச்சுப் போட்டி, குழு நடனப் போட்டி ஆகியவற்றின் வெற்றியாளர்களது படைப்புகள் ஒளிபரப்பப்படும்.

**3. உங்களுக்குத் தெரியுமா?**
மரியன்னை தொடர்பான சுவையான கேள்விகளுக்கு வாட்சப் வழியாக பதில் சொல்லுங்கள். எல்லா நாள்களிலும், எல்லாக் கேள்விகளுக்கும் சரியான பதில்களைச் சொல்லும் அன்னையின் பிள்ளைகளுக்குப் பரிசுகள் காத்திருக்கின்றன.

**4. தாயே உன் புகழ் பாடி**
தூத்துக்குடி நகரப் பங்குகளின் பாடகர் குழுவினர் நம் தாயைப் புகழ்ந்து பாடும் மரியன்னைப் பாடல்கள் ஒளிபரப்பப்படும்.

**5. தாயின் மடியில் நான்**
பரிசுத்த பனிமயத் தாயின் திருத்தலப் பேராலயத்தில் பணியாற்றிய, பேராலயத்தோடு நெருங்கியத் தொடர்புடைய அருள்தந்தையரது பணிக்காலம் குறித்த பகிர்வுகளும், கடந்த காலங்களில் நடைபெற்ற மரியன்னை மாநாட்டில் அன்னையின் புகழ் பேசிய தந்தையர் சிலரது கருத்துரைகளும் ஒளிபரப்பப்படும்.

**6. தினமும் வாழ்த்துவோம்**
இசைக்கலைஞர் சகோ. பிரபாகர் அவர்களது இசையில், விஜய் தொலைக்காட்சியின் “சூப்பர்சிங்கர்” நிகழ்ச்சி வழியாகப் புகழ்பெற்ற சகோ. இர்வின் விக்டோரியா நம் மனம் கவர்ந்த மாதா பாடல்களைப் பாடுவார்.

**7. நேற்று இன்று நாளை**
அன்னையின் பெருவிழா நிகழ்வுகள் பற்றிய அறிவிப்புகள், நினைவூட்டல்கள், பாராட்டுகள் இடம்பெறும்.



## பனிமய சாட்சியம்

129

**ஹரிபாபு தனலெட்சுமி, நாகர்கோவில்**

எனது மகளுக்கு திருமணமாகி பத்து வருடங்கள் ஆகியும் குழந்தை இல்லாமல் மிகவும் வேதனைப்பட்டோம். 2022ஆம் ஆண்டு பனிமயத் தாயின் திருவிழாவின் போது தாயிடம் கையேந்தி வேண்டினேன். 2024ஆம் ஆண்டு பனிமயத் தாயின் கருணையால் மகளுக்கு அழகான குழந்தை பிறந்தது. 2025ஆம் ஆண்டு குடும்பத்துடன் அன்னைக்கு நன்றி செலுத்திவிட்டு இந்த சாட்சியையும் பகிர்ந்து கொள்கிறேன். மரியே வாழ்க.



# விவிலியப் போட்டி 123

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

**யூதித்து நூல் அதிகாரம் 9 முதல் 16 வரை**

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**ஓரிரு வார்த்தையில் விடையளி.**

1. நான் உண்ணமாட்டேன் என்று யூதித்து எதைக் கூறினார்?
2. உலகமெங்கும் உனது புகழ் விளங்கும் என்று கூறியது யார்?
3. தலையில் சாம்பலை தூவிக் கொண்டவர் யார்?
4. யூதித்து எத்தனை நாள் பாளையத்தில் தங்கியிருந்தார்?
5. மக்கள் அனைவரும் எத்தனை நாள் எதிரிகளின் பாளையத்தை சூறையாடினார்கள்?
6. எருசலேமின் திருவிடத்துக்கு முன்பு எத்தனை நாள் விழா கொண்டாடினார்கள்?
7. யூதித்து கணவர் பெயர் என்ன?
8. யூதித்து எங்கே உயிர் துறந்தார்?
9. யூதித்து எந்த வயதில் இறந்தார்?
10. யூதித்துக்காக இஸ்ரயேல் இனத்தார் எத்தனை நாள் துக்கம் கொண்டாடினர்?

## விவிலியப் போட்டி 122

**ஜூன் 2025** — விடைக்குறிப்புகள்

**யூதித்து நூல் அதிகாரம் 1 முதல் 8 வரை**

| | | |
|---|---|---|
| 1. | இஸ்ரேலின் ஆண்கள் யாவரும் | 4: 9 |
| 2. | அக்கியோர் | 5:5 |
| 3. | மெராரி | 8: 1 |
| 4. | யூதித்து | 8:31 |
| 5. | நெபுகத்னேசர் | 1:1 |
| 6. | யூதித்து | 8:16 |
| 7. | மனாசே | 8: 2 |
| 8. | யூதித்து | 8:8 |
| 9. | கார்மி | 6: 15 |
| 10. | ஊசியா | 6: 15 |

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.07.2025**

## உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னைப் பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளைத் தாளில் எழுதி பங்கு அலுவலகத்துக்கு கொடுத்து விடுங்கள். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். மறவாமல் குடும்ப அட்டை எண்ணையும் எழுதுங்கள். வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம். பெயர் எழுதப்படாத விடைத்தாள்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.



**63831 98510** அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.

*சரியான விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 192*

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 118**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. இராயப்பர் அன்பியம் — **ரொமில்டா வெனான்சியுஸ்**
2. சவேரியார் அன்பியம் — **டெலிலா அமலன்**
3. சிறுமலர் அன்பியம் — **விஜிலியா**
4. சூசையப்பர் அன்பியம் — **மென்சி**

**பாராட்டுக்குரியவர்கள் : 114**

**அந்தோனியார்**
5. ரீனா மொறாயிஸ்
6. சரோஜா
7. ஜெயா
8. பிருந்தா
9. ஜெசி
10. லீனா

**அன்னை தெரசா**
11. செல்வராணி
12. ரெய்ஸா சுஜய்
13. ஜான்சி ராணி
14. சுகன் மோனிஷா
15. சுரேஷ் பிரேமா
16. ஜூலியட்ஸ் ரூபி
17. சாந்தி அந்தோணி சந்தியாகு

**அன்னை வேளாங்கன்னி**
18. கவாஷினி ஆல்வின்
19. டென்சி லோபோ
20. மிஷல் மிரல்
21. ஆரோன் ஷாரோன்
22. லிசியா ஜெகதீஸ்
23. ஜெரினா செல்வம்

**கிறிஸ்தரசர்**
24. லூரட் வசந்த்
25. செலஸ்கி கிளமென்ட்
26. ரெக்ஸ் கிரீன்வெல்
27. ஜூலியட் சாவியோ
28. தியோடர் ஜெனட்

**தஸ்நேவிஸ் மாதா**
29. அஸ்கேனியஸ் அந்தோணிசாமி

**திவ்யபாலன்**
30. பிரின்சி
31. சகாயராணி தனராஜ்
32. ஸ்டார்லக் ஏஞ்சலின்
33. சென்சிலா சகாயராஜ்

**பாத்திமா மாதா**
34. ரீனா ராஜா
35. ஸ்டெபி ரீகன்
36. சுகந்தா ஸ்டெனி
37. பிச்சம்மாள்

**இரக்கத்தின் மாதா**
38. பாப்டிஸ்டா
39. இருதயம்மாள் கொன்சால்
40. சகாயராணி
41. சேவியர் அம்மாள் கோமஸ்
42. செல்வி புரோ
43. பிரைட்டன் ஜெரோபின்
44. சித்ரா மோத்தா

**ஜெபமாலை மாதா**
45. கல்யாணி செல்வராஜ்
46. சகாயம்மாள் பெனடிக்ட்

**ஜூடு**
47. டிரைபேனா
48. கிறிஸ்டோ ஜெபினா
49. டெரன்சியா அரிஸ்டோ

**காவல் தூதர்**
50. சாந்தி ஆல்ட்ரின்
51. ஜோ ட்ரினிஷா
52. பிரிசில்லா
53. வெனிட்டாள்
54. ரஸ்கின் வசந்தா
55. ஜூலியஸ் தல்மேதா
56. எலிஜா இம்மானுவேல்
57. சார்லட் பிராங்
58. அல்பின்
59. ஜெயா அகஸ்டின்

**குழந்தை தெரசா**
60. பெர்லி டென்சன்
61. பெனி மொறாயிஸ்
62. கிறிஸ்டி லிஸ்டன்

**குழந்தை இயேசு**
63. பிரான்சிஸ் வாஸ்
64. மோனிகா செபஸ்டின்
65. எமல்டா

**மணல் மாதா**
66. ரொசாரி கோமஸ்
67. கெயிட்டன் பர்னான்டோ
68. வெர்ஜினியா

**லூர்து மாதா**
69. சாண்டினா
70. ஆலிவர் வி. ராயன்
71. ஜெனோ சேவியர்
72. ரோஸ்லின் தாமஸ்
73. பிலோ
74. ரஜூலா ஜான் போஸ்கோ

**மிக்கேல் அதிதூதர்**
75. ஜோஸ்பின்
76. வினோ அந்தோணி

**பனிமய**
77. சுரேஷ் ஆனி
78. மெர்ஸி;
79. ஜாக்குலின் வினோதினி
80. ராணி
81. ஜூடுரதி
82. அந்தோணிசாமி
83. சகாயராஜா சகாயராணி
84. ரமேஷ் பர்னாந்து

**பவுலடியார்**
85. லீமாரோஸ் ஜாய்
86. ராஜா ரோஸ்லின்
87. ஒபிலியா தாமஸ்

**பரிபூரண மாதா**
88. சப்னா கினிஸ்டன்

**பொம்பெய் மாதா**
89. இம்மாக்குலேட் சதீஷ்
90. டிஃபானி அண்டோ
91. லூடா கான்ஸ்டன்
92. அண்டோ எல்ஃபி
93. லெரின்ஸ் ரொட்ரிகோ
94. ஜான்சிராணி அமல்ராஜ்
95. பெலிக்ஸ் சோபியா
96. மேத்யூ கர்டோசா

**இராயப்பர்**
97. போஸ்கோ ரெனோ
98. டெய்ஸி
99. ஆக்னல் டாஃப்னி

**சவேரியார்**
100. ஜான்சி ஜெயக்குமார்
101. வினிஸ்டா ஷெரின்
102. அனுஷியா பீட்டர்
103. ஜோர்னல் ஜென்ஸி

**செபஸ்தியார்**
104. பிரவீனா
105. ஜெசிலா சேவியர்
106. அந்தோனியம்மாள் டென்சிங்

**சிந்தாத்திரை மாதா**
107. நேசம்
108. ஜூடி ஆரோக்கியராஜ்
109. டோனஸ் ராயன்

**சிறுமலர்**
110. விஜி சகாயராஜ்
111. எல்சிட்டாஆனந்தன்
112. செலஸ்டின்

**சூசையப்பர்**
113. கிறிஸ் ரீஜோ
114. ஹேமலதா
115. காஸ்பின் மோனிஷா

**திருச்சிலுவை**
116. ஜஸ்டின் ஸ்நோகுளோரி
117. சரோலின் கில்டன்

**வியாகுல மாதா**
118. லூர்து லினட்



## பிற பங்குகளிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 74

### பரிசு பெறுபவர்கள் : 4

119. தேனி — **ரொசாரியோ மேரி ஈவ்லின்**
120. மடத்துக்குளம் — **ததேயுஸ் கரோலின்**
121. காந்திநகர் — **சாந்தினி**
122. இஞ்ஞாசியார் கோவில் — **பாத்திமா ஏஞ்சலினா**

## பாராட்டுக்குரியவர்கள் : 70

**அபுதாபி**
123. சுமிதா

**சென்னை**
124. கமலஜோதி ஜெயசீலன்
125. ரெஜினா கிரகோரி
126. டெனிசா கிளாட்
127. ஜெரால்டு ஜோதி
128. பிரேமா குணசீலன்

**கொடைக்கானல்**
129. ஜெஸிந்தா மார்ட்டின்

**மதுரை**
130. ஜெஸிந்தா மேரி

**திருச்சி**
131. மேத்யூ விவேக்
132. மோனிட்டா கிறிஸ்டி
133. டோனி

**திருப்பூர்**
134. பிரான்சிஸ் அர்லின்

**ஆறுமுகநேரி**
135. ஜெயராணி
136. தொம்மை அந்தோணி

**வீரபாண்டியன் பட்டணம்**
137. ரேச்சல் ராயன்

**ஆலந்தலை**
138. தங்கராஜ் பொன்சேகா

**உவரி**
139. அர்லின் ஈவ்லின்

**உடன்குடி**
140. ஸ்நோவின்

**தருவைக்குளம்**
141. லில்லி சோபியா
142. மைக்கேல் ஸ்டிபானி

**தேனி**
143. குழந்தைதெரஸ்

**புதியம்புத்தூர்**
144. ஹெலன் அன்னமனி

**கடலூர்**
145. ஹென்றி தாஸ்

**கோயம்புத்தூர்**
146. சத்யா சேவியர்

**கயத்தார்**
147. அமல்ராஜ்

***தூத்துக்குடி நகர பங்குகள்***

**திரு இதயங்களின் பேராலயம்**
148. பீட்டர் ஜெயந்தி
149. மேரி கிரேட்டா ராஜா
150. ரிமோல்டா
151. ரமோலா கமிலஸ்
152. டீனுராய் ஜேசுபாலு

**குருஸ்புரம்**
153. பௌவுசி ஜோ மைக்கேல்
154. பிளாசி செல்வராஜன்
155. ஜான்சி மெண்டிஸ்
156. ஆசிர்வாதம்
157. மாசில்லா

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
158. சுகிர்தா
159. டோமினிக்
160. மோட்ச ராணி
161. சகாயம்

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
162. செக்கரியா சாமுவேல்
163. லிஜியா

**யூதா ததேயு கோவில்**
164. சகாயமேரி
165. ஆரோக்கிய சர்மிளா
166. இம்மானுவேல் சேகர்
167. ஜூடி ரீத்தம்மாள் மேரி
168. ரோஸ் சேவியர்
169. ஜெனட் சேவியர்
170. ஷிர்லி
171. பாக்கியசீலி ஹெப்சி
172. லூர்து சுவிதா

**அந்தோணியார் கோவில்**
173. இருதயம்மாள் கபிரியேல்
174. வயோலா ஜான்சன்
175. மகேஷ் சுஜாதா
176. ரீடன்

**காந்தி நகர்**
177. பின்டன் சோஃபியா
178. ரமேஷ் நர்மதா
179. அன்சிட்டா
180. பேபி வால்ட்டர்

**பாத்திமா நகர்**
181. ஷர்மிளா ரமேஷ்
182. மேரி ஹம்லின்

**சார்லஸ் கோவில்**
183. சகாயிட்டா மச்சாது
184. அல்போன்சா பர்னாண்டோ

**அண்ணா நகர்**
185. வென்சி ராணி
186. ஹெலன் ஜான் கென்னடி

**புனித இஞ்ஞாசியார் கோவில்**
187. சகோ. சூசை ரூபி
188. சகோ. ரூபெல்லா மேரி

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
189. வெர்ஜின்
190. தயாபர ராணி

**திரேஸ்புரம்**
191. கோல்பின் ஜேசுராஜ்
192. அபின்சா



**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 204**

**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 192**

# பனிமயப் பகிர்வு

**(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 13)**

**ஜூலை - 2025**

| | | |
|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | **அருள்பணி. ஸ்டார்வின்** |
| உதவிப் பங்குத் தந்தை | : | **அருள்பணி. பிரவீன் ராசு** |
| களப் பணியாளர் | : | **சகோ. மிக்கேல் அருள்ராஜ்** |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| **தினசரி திருப்பலிகள்** | **சனிக் கிழமைகளில்** | **ஞாயிற்றுக் கிழமைகளில்** |
|---|---|---|
| காலை 5.30, 6.30<br>மாலை 5.30 | காலை 5.30, 6.30 திருப்பலி<br>காலை 11.00 செபமாலை, **நவநாள் திருப்பலி**<br>மாலை 5.30 திருப்பலி<br>மாலை 6.30 செபமாலை நவநாள், நற்கருணை ஆசீர் | காலை **5.00, 6.30, 8.00** திருப்பலி<br>காலை **9.30** ஆங்கிலத் திருப்பலி<br>மாலை **5.30** திருப்பலி<br>மாலை **6.30** செபமாலை, நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** *சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00*

*மற்ற நாட்களில் எந்நேரமும் பங்குத்தந்தையரை அணுகலாம்.*

- ✓ *திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (திருவருகைக் காலம், தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)*

- ✓ *புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (திருவருகைக் காலம், தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).*
- ✓ *புதுநன்மை அருள்சாதனம் பெற விரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.*

- ✓ *திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00 மணிக்கு அனுமதி உண்டு. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.*
- ✓ *ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30*
- ✓ *அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்*

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : *காலை 10.00 மணி - 01.00 மணி*<br>*மாலை 04.00 மணி - 05.30 மணி*
- ✓ *இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.*
- ✓ *நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.*

## பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

1. நமது பேராலயப் பங்கின் பக்த சபையான புனித பொம்பெயி மாதா சபையினர் தங்களின் 122ஆம் ஆண்டுத் திருவிழாவை 11.05.2025 ஞாயிறு காலைத் திருப்பலியில் கொண்டாடினார்கள். **திருமதி. சகாயம்மாள்** தலைமைப் பொறுப்பை நிறைவு செய்ய, **திருமதி. மெஜர்லா** புதிய தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். காலை உணவைப் பகிர்ந்து மகிழ்ந்த சபையினர், மாலையில் பங்குத்தந்தையின் தலைமையில் விழாக் கொண்டாடி மகிழ்ந்தனர்.
2. 30.05.2025 வெள்ளிக்கிழமை மாலை 06.30 மணிக்கு **புனித கன்னி மரியா எலிசபெத்தை சந்தித்த திருவிழா**வுக்கான மாலை ஆராதனை நடைபெற்றது.
3. 31.05.2025 சனிக்கிழமை வணக்கமாத நிறைவு நாளானதால் அன்று மாலை 06.30 மணிக்கு தேரோடும் வீதிகளில் அன்னையின் **சப்பரப் பவனியும், செபமாலைப் பவனியும்,** தொடர்ந்து பேராலயத்தில் திவ்விய நற்கருணை ஆசீரும் நடைபெற்றன.
4. 07.06.2025 மாதத்தின் முதல் சனி. அன்று மாலையில் சப்பரப் பவனி, நவநாள் வழிபாடு, திவ்விய நற்கருணை ஆசீர் நடைபெற்றன. இந்நிகழ்வுகள் நமது ஸ்நோஸ் பசிலிக்கா யூடியூப் சேனலிலும், யாழ், சூர்யா தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்பட்டன.
5. நமது பங்கின் **அடைக்கல அன்னை அவை** இல்லத்தில் பணியாற்றி பணிமாற்றம் பெற்றுச் சென்றுள்ள சகோ. **கரோலின்,** சகோ. **ஜெயமேரி,** சகோ. **வணக்கப் பிரகாசி,** சகோ. **ஆனிஸ் நான்சி** ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. மேலும் **அமலவை** இல்லத்திலிருந்து சகோ. **பென்சி** அவர்களும் பணிமாற்றம் பெற்று சென்றுள்ளார்கள். இவர்கள் அனைவரின் பணிவாழ்வு சிறக்க வாழ்த்துகிறோம்.
6. சவேரியானா இல்லத்தில் பணியாற்றி பணிமாற்றம் பெற்றுச் சென்றுள்ள இல்லத் தலைவர் **அருள்தந்தை ஆரோக்கியசாமி, அருள்தந்தை ஜெயராஜ்** ஆகியோருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. மேலும் இல்லத்திற்குப் புதிதாக வந்துள்ள இல்லத் தலைவர் **அருள்தந்தை மரிய சிங்கராயர்** அவர்கள் பேராலயப் பங்கு மக்கள் சார்பாக வரவேற்கப்பட்டார்கள்.
7. 08.06.2025 ஞாயிற்றுக்கிழமை, காலை 06.30 மணி திருப்பலியின் முடிவில் நமது பங்கைச் சார்ந்த **பத்தாம், பதினொன்றாம், பன்னிரண்டாம் வகுப்புகளில்** அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணாக்கர்களுக்கு ஊக்கப்பரிசுகள் வழங்கப்பட்டன.
8. 08.06.2025 முதல் **ஞாயிறு மறைக்கல்வி வகுப்புகள்** மீண்டும் தொடங்கப்பட்டன. 1 முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கின்ற அனைத்து மாணவ, மாணவியர்களும் ஞாயிறு மறைக்கல்வி வகுப்பில் கலந்துகொண்டார்கள்.
9. நமது பங்கின் **அடைக்கல அன்னை** அவை இல்லத்திற்குப் புதிதாக வந்துள்ள அருள்சகோ. **ஜோசப் ஜெயராணி,** அருள்சகோ. **ஜோசப் அனிதா,**

அருள்சகோ. **நம்பிக்கைமேரி,** அருள்சகோ. **கிறிஸ்டி ராணி** நால்வருக்கும் பங்கு மக்கள் சார்பாக வரவேற்பு வழங்கப்பட்டது. நமது பங்கின் **அமலவை** இல்லத்திற்குப் புதிதாக அருள்சகோ. **மேரி** பணியாற்ற வந்துள்ளார்கள். இவர்கள் அனைவரையும் வாழ்த்தி வரவேற்கிறோம்.!

10. 13.06.2025 வெள்ளிக்கிழமை **புனித அந்தோனியார் திருவிழா**வை முன்னிட்டு மாலை 05.30 மணி திருப்பலி புனித அந்தோனியார் சிற்றாலயத்தில் திருவிழா சிறப்புத் திருப்பலியாக நடைபெற்றது.
11. **இயேசுவின் தூய்மைமிகு திருவுடல், திருஇரத்தப் பெருவிழா**வை முன்னிட்டு 22.06.2025 ஞாயிறு காலை 10.30 மணி முதல் மாலை 04.00 மணி வரை நமது பேராலயத்தில் தொடர் நற்கருணை ஆராதனை நடைபெற்றது. பங்கின் பக்த சபையினர் இதனை வழிநடத்தினார்கள்.
12. பேராலயப் பங்குமேய்ப்புப் பணிப் பேரவையின் நிதிக்குழு, செயற்குழுக் கூட்டங்கள் 23.06.2025 திங்கட்கிழமை மாலை நேவிஸ் அரங்கத்தில் வைத்து நடத்தப்பட்டன.
13. **பேராலயப் பங்குமேய்ப்புப் பணிப் பேரவையின் பொதுக்குழுக் கூட்ட**மானது 24.06.2025 செவ்வாய்க்கிழமை மாலை 07.00 மணிக்கு அந்தோனியார் அரங்கத்தில் வைத்து நடத்தப்பட்டது. பெருவிழா தொடர்பான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பங்கில் நிகழ்ந்தவை



### *வரவேற்கிறோம்*

### 1. திருமுழுக்குப் பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 29. | ஆன்டனி தியோ | ஜெபஸ்டன் - சௌமியா | 01.06.2025 | லூர்து மாதா |
| 30. | ரையான் ரோகர்ஸ் | ஜெஃப்ரி ரேகா | 01.06.2025 | திவ்யபாலன் |
| 31. | செரில் பிரான்சஸ் | வில்பின் -ஜெரோஷினி | 08.06.2025 | சூசையப்பர் |
| 32. | ஸ்கைடன் | கெய்சன் - சைனிசிமி | 29.06.2025 | சிந்தாயாத்திரை |



### *ஆசி கூறுகின்றோம்*

### 2. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 38. | ஆரோக்கிய ஜெரால்ட் ஜாய்சன் - வலன்டீனா | தஸ்நேவிஸ் மாதா | 08.06.2025 |
| 39. | அஸ்வந்த் - நிமித் சித்ரா | மிக்கேல் அதிதூதர் | 16.06.2025 |



### *செபிக்கின்றோம்*

### 3. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 46. | ரீத்தம்மாள் கர்டோசா | புஷ்பராஜ் | 28.05.2025 | பவுலடியார் |



## நடைபெறவிருப்பவை

★ 04.07.2025 தலைவெள்ளிக்கிழமை அன்று காலையும், மாலையும் நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.

05.07.2025 மாதத்தின் **முதல் சனியன்று மாலைத் திருப்பலி**யும், சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூடியூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.

## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

❖ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும் வழங்கப்படுகின்றது. வரும் நாள்களில் **அன்பு உணவு** வழங்க விரும்புவோர் பங்கு அலுவலகத்தில் முன்பதிவு செய்யவும்.

❖ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசீர், திருப்பலி நடைபெறும்.

| எண். | நாள் | செய்தித் தலைப்பு |
|---|---|---|
| 49. | 01.07.2025 | இரக்கம் சுரக்கும் அன்பு |
| 50. | 08.07.2025 | சான்று பகரும் அன்பு |
| 51. | 15.07.2025 | மன்னித்து மறக்கும் அன்பு |
| | 22.07.2025<br>29.07.2025 | பனிமய அன்னையின்<br>பெருவிழா நாள்கள் |

## வழியனுப்புகிறோம்!



நமது பங்கிலிருந்து பணிமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, அடைக்கல அன்னை சபையைச் சேர்ந்த **அருள்சகோ. கரோலின், அருள்சகோ. ஜெயமேரி அருள்சகோ. வணக்கப் பிரகாசி, அருள்சகோ. அனிஸ் நான்சி,** அமலவையைச் சேர்ந்த **அருள்சகோ. பென்ஸி,** சேசு சபை துறவிகள் இல்லத்தில் பணியாற்றிய **அருள்தந்தை ஆரோக்கியசாமி, அருள்தந்தை ஜெயராஜ்** ஆகியோரை வாழ்த்தி வழியனுப்புகிறோம்.

## வரவேற்கிறோம்!



நமது பங்கிலுள்ள அடைக்கல அன்னை சகோதரிகள் இல்லத்திற்கு **அருள்சகோ. ஜோசப் ஜெயராணி, அருள்சகோ. ஜோசப் அனிதா, அருள்சகோ. நம்பிக்கைமேரி, அருள்சகோ. கிறிஸ்டி ராணி** நால்வரும் பணியாற்ற வந்துள்ளார்கள். நமது பங்கின் அமலவை இல்லத்திற்கு **அருள்சகோ. மேரி** பணியாற்ற வந்துள்ளார்கள். சேசு சபை துறவிகள் இல்லத்திற்கு **அருள்தந்தை மரிய சிங்கராயர்** பணியாற்ற வந்துள்ளார்கள். இவர்கள் அனைவரையும் வாழ்த்தி வரவேற்கிறோம்.!



புனித யாத்திரை
பயணம்-1 & 2
தெய்வீக
அரு நிகழ்வான
மெஜுகோரே
போஸ்னியா மற்றும்
ஹெர்சகோவினா
மரியன்னை
தோற்றங்கள்
தொடர்கின்றன
போஸ்னியாவில்
உள்ள மெஜுகோரேயில்
மட்டுமே,
இன்று வரை மரியன்னை
காட்சிகள் தொடர்ந்து
பதிவாகும் ஒரே தளம் ஆகும்.
இது பல யாத்ரீகர்களை
ஈர்க்கிறது.
நீங்களும் ஒரு தரிசனத்தால்
ஆசீர்வதிக்கப்படலாம்.
நன்மைகளும், புதுமைகளும்,
பெறுவதற்கு இது ஒரு சிறந்த
வாய்ப்பாக இருக்கும்.
வாருங்கள்.
எங்களைப்
பின் தொடரவும்
நோவி ஜர்னி பிரைவேட் லிமிடெட்
சென்னை
+91 9344426734


புனித யாத்திரை
பயணம் 1 & 2
NOVI
நம்பிக்கையுடன் வாருங்கள்.
மெஜுகோரேயில் அற்புதங்களைப் பெறுங்கள்!
(12 நாட்கள், 11 இரவுகள்) அல்லது
(6 நாட்கள், 5 இரவுகள்)
பயணம் - 1
போஸ்னியா ஆன்மீக பயணம்
அப்பரிஷன் ஹில் செயிண்ட் ஜேம்ஸ் தேவாலயம் திஹால்ஜினா தேவாலயம்
ஆடம்பரம் தங்குமிடம்
4 நட்சத்திர ஹோட்டலில் * தங்குதல் 3 உணவுகள் / இடமாற்றங்கள்
உற்சாகமான அனுபவம்
கிராவிஸ் நீர்வீழ்ச்சி, தோஸ்தர் பாலம், போசிடெல்ஜ், நெரெட்வா நதி
தனிப்பட்ட சுற்றுலாவழிகாட்டி
அனுபவம் வாய்ந்த வழிகாட்டியுடன் சுற்றுலா
பயணம் - 2
(4 நாட்கள் 4 இரவுகள்)
வார்சா - செஸ்டோச்சோவா -கிராகோவ் - வாடோவிஸ் - ஆஷ்விட்ஸ் - கிராகோவ்
போலந்து
(1 நாள், 1 இரவு)
ஜாக்ரெப்
குரோஷியா
(2 நாட்கள், 1 இரவு)
புடாபெஸ்ட் ஸ்லோவாக்கியா வழியாக
ஹங்கேரி
(5 நாட்கள் 5 இரவுகள்)
மெஜுகோரே, மோஸ்டர், சரஜேவோ
போஸ்னியா
இப்போதே முன்பதிவு செய்யுங்கள்
+91 9344426734
operations@novijourney.com

# எம் அன்புப் பெற்றோர்
## மற்றும்
# சகோதரி நினைவு

| 51ஆம் ஆண்டு | 69ஆம் ஆண்டு | 8ஆம் ஆண்டு |
| --- | --- | --- |
| M. தாமஸ் மஸ்கரனாஸ் | T. பாத்திமா மஸ்கரனாஸ் | T. சம்மனஸ் அம்மாள் மஸ்கரனாஸ் |
| 16.07.1974 | 16.11.1956 | 16.06.2017 |



பிரிவால் துயருறும்

**Rev. Fr. T. டெரன்ஸ் மஸ்கரனாஸ் SVD (HONG KONG)**

| மக்கள் | மருமக்கள் |
| --- | --- |
| T. ஜெசிந்தா மஸ்கரனாஸ் | L.R.P. ராயன் |
| T. பிரான்சிஸ் மஸ்கரனாஸ் | ஜூலியட் பிரான்ஸிஸ் |
| T. வெனிட்டாள் மஸ்கரனாஸ் | |
| T. இருதயராஜ் மஸ்கரனாஸ் | சரோ ராஜ் மஸ்கரனாஸ் |
| T. ஜோசப் மஸ்கரனாஸ் | சார்லெட் ஜோசப் மஸ்கரனாஸ் |

பேரன்கள், பேத்திகள், பூட்டன்கள், பூட்டிகள்

**நினைவுத் திருப்பலி**

16.07.2025 புதன்கிழமை, மாலை 5.30 மணி
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
தூத்துக்குடி.

அன்னை இல்லம், No. 1, பெரிய கோயில் தெரு, தூத்துக்குடி.
Mobile : 95663 28215

"நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்தில் சூரியனைப் போல் பிரகாசிப்பார்கள்" *(மத் 13:43)*

**விண்ணக வாழ்வின் 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



Born
1926

Died
11.07.2008

**100ஆம் ஆண்டு பிறந்த நாள் நினைவு**

## S. THOMMAI ANTONY FDO

**14ஆம் ஆண்டு நினைவு**



## M. BASALIAMMAL CARDOZA

Born : 1928
Died : 20.05.2011

**5ஆம் ஆண்டு நினைவு**



## T. WILLINGTON

Born : 21.07.1950
Died : 06.09.2019

பிரிவால் துயருறும்

மகன்கள், மகள்கள், தம்பிகள், தங்கைகள்
மருமகன்கள், மருமகள்கள், பேரன்கள், பேத்திகள்
கொள்ளு பேரன், கொள்ளு பேத்தி

# 3rd Year Remembrance



**Born**
**10.08.1957**

**Died**
**09.07.2022**

# Capt. F.T. MERCIAN FERNANDO

LOVING HUSBAND, FATHER AND GRANDFATHER

*We thank the Lord for you every single day and night.*
*We remember you throughout our days*
*and miss you in all our little milestones.*
*We pray that you find eternal joy, peace*
*and rest in our Lord's divine paradise.*

*We miss you more than words can say.*

---

Bereaving wife, daughters, family
and loved ones.

# ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி



பிறப்பு
09.05.1945

இறப்பு
28.07.2020

துபாய்

## P. மைக்கேல் பர்னாந்து

ஒய்வு உறக்கமின்றி அயராது உழைத்து
முகமலர்ச்சியுடன் எல்லோரிடமும் பாசத்தைப் பொழிந்து
அனைவரின் மனதில் நீங்காத இடம் பிடித்து
நினையாத நேரத்தில் எங்களை விட்டுப் பிரிந்த
என் கணவருக்கு இன்று ஐந்தாம் ஆண்டு

என்றும் உங்கள் நினைவில் நிற்கும் மனைவி
*சேசம்மாள் பி.ராயர்*

ஏழு கடல் துறையோடு எல்லோருக்கும் ஏக அடைக்கலத்தாய்

# திவ்விய சந்த மரிய தஸ்நேவிஸ் மாதாவின்

## 443ஆம் ஆண்டு பெருவிழா நிகழ்வுகள் 2025



இவரே உம் தாய் (யோவா 19:27)

25.07.2025 வெள்ளி சிறப்பு கொடிப் பவனி

26.07.2025 சனி கூட்டுத் திருப்பலி, கொடியேற்றம், அன்னைக்குப் பொன்மகுடம் சூட்டுதல்

03.08.2025 ஞாயிறு புதுநன்மைத் திருப்பலி, திவ்விய நற்கருணைப் பவனி

04.08.2025 திங்கள் பெருவிழா மாலை ஆராதனை

**05.08.2025 செவ்வாய்**

காலை 04.30 மணி : முதல் திருப்பலி

காலை 05.30 மணி : 2ஆம் திருப்பலி

காலை 07.30 மணி : பெருவிழாத் திருப்பலி
மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகை

காலை 09.00 மணி : 4ஆம் திருப்பலி
பேரருள்தந்தை ரவிபாலன்

காலை 10.00 மணி : 5ஆம் திருப்பலி
மேதகு ஆயர் இவோன் அம்புரோஸ்

நண்பகல் 12.00 மணி : 6ஆம் திருப்பலி
மண்ணின் மைந்தர்கள்

மாலை 05.00 மணி : பெருவிழா நிறைவுத் திருப்பலி

இரவு 07.00 மணி : பரிசுத்த பனிமயத் தாயின் திருவுருவப் பவனி

இரவு 10.00 மணி : பரிசுத்த பனிமயத் தாய்க்கு குடும்பங்களை ஒப்புக்கொடுத்தல்

**நவநாள்களில்...**

காலை 04.30 மணி
செபமாலை
தொடர்ந்து திருப்பலிகள்

மாலை 03.00 மணி
தேர்ஸ்
செபமாலை, மறையுரை
அருளிக்க ஆசீர்

இரவு 07.15 மணி
செபமாலை, பிரார்த்தனை
திவ்விய நற்கருணை ஆசீர்

அன்னையின் பிள்ளைகள் அனைவரையும்
அன்புடன் அழைக்கும்...

அருள்பணி. ஸ்டார்வின், அதிபர், பங்குத்தந்தை
அருள்பணி. பிரவீன் ராசு, உதவிப் பங்குத்தந்தை
அருள்சகோ. மிக்கேல் அருள்ராஜ், களப்பணியாளர்

பங்கு மேய்ப்புப் பணிக்குழுவினர்
துறவியர், பக்த சபையினர்
இறைமக்கள்

பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம், தூத்துக்குடி

SHINY Ph: 9842131493